உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக



யாழ் சுதுமலை வடக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும்

ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் திரு. குமாரசாமி ரவீந்திரகுமார்** அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்,
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி உருகி ஒளியூட்டி,
ஆலமரமாக எம் குடும்பத்திற்கு நிழல் பரப்பி
எம்மையெல்லாம் அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
வளர்த்து நல்வழிகாட்டி,
நற்கல்வியூட்டி, உறுதுணையாக இருந்து
சொந்த பந்தங்கள் அனைவருக்கும் பக்கபலமாய் இருந்து
சீரும் சிறப்புடன் வாழவைத்து,
மனிதருள் மாணிக்கமாய்,
குடும்பத்தின் தலைவராக, தந்தையாக மனம் பல
மாண்புடன் பரப்பி இனமெல்லாம் இன்புடன் வாழ
ஏற்ற நற்பணிகள் காத்து வையத்துள்
என்றும் நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினிய மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

**என்றும் நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

விராட் விஸ்வப் பிரம்மனே நமக

அன்னை மடியில்

11 * 08 * 1965



ஆண்டவன் அடியில்

03 * 10 * 2017

# அமரர் திரு குமாரசாமி ரவீந்திரகுமார்

## திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி அமைந்த புரட்டாதித்திங்கள்
பூண்ட பூர்வபக்க திரயோதசியில் - மாண்பு
குமாரசாமி மைந்தன் ரவீந்திரகுமார் ஐயன்
அமரபதம் தானடைந்தான் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பஞ்சபுராணம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே

## தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையயமல ரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

(திருஞானசம்பந்தர்)

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டி யோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே (திருநாவுக்கரசர்)

பித்தாபிறை சூடி பெரு மானேயருளாளா
எத்தான்மற வாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூ அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனெனலாமே

(சுந்தரர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

(மாணிக்கவாசகர்)

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

(திருமாளிகைத்தேவர்)

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

(சேந்தனார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் (சேக்கிழார்)

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசற் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

(அருணகிரிநாதர்)

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
- (காசியப்பசுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறந்தவர் பிரியாவிடை பாடல்

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை!

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே?

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடு ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடி வந்து சேரும்

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர் கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தென்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திட கூடும்


மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க!
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க!
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க!

கவிஞர் வைரமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் குமாரசாமி ரவீந்திர




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ந்திரகுமாரின் வம்ச விருட்சம்

இராசதுரை
+
தெய்வேந்திராணி

னி

றயனகுமாரி

றமேஸ்குமார்

ராஜ்குமார்

ஸ்வரி

சர்பேஸ்வரி

குணதீஸ்வரி

சுபர்ணா

முகுந்தன்

ஜெயந்தன்

றீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் குமாரசாமி ரவீந்திரகுமாரின் வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாணத்தின் மணிமுடியாக விளங்கும் சுதுமலை வடக்கு மானிப்பாயை சேர்ந்த குமாரசாமி துரையம்மா தம்பதிகட்கு நான்காவது மகனாக 11.08.1965 அன்று ரவீந்திரகுமார் பிறந்தார். இவருடன் முத்தாக பிறந்தவர்களான விஜயகுமார், உதயகுமார், ஜெயக்குமார், சதீஸ்குமார், சுதர்மினி, றஜனகுமாரி, ரமேஸ்குமார், ராஜ்குமார் ஆகியோர் ஆவார். அவர் தனது ஆரம்பக்கல்வியை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்று தொடர்ந்து கா. பொ. த. சாதாரண வகுப்பு வரை பயின்று வந்தார். தனது பள்ளிப்பருவத்தில் மிகவும் சுட்டித் தனமாகவும். பல குறும்புகள் செய்தும் தனது அன்பாலும் பண்பாலும் எல்லோர் மதிப்பிற்கும் உரியவரானார்.

மகிழ்ச்சிகரமாக அப்பா, அம்மா, சகோதரர்களோடு வாழ்ந்து வரும் வேளையில் 1985ம் ஆண்டு ஜேர்மன் நாட்டில் கால் வைத்தார். நாட்கள் உருண்டோடின. திருமண வயதை எட்டி நிற்கும் வேளையில் தச்சன்தோப்பைச் சேர்ந்த திரு. திருமதி இராஜதுரையின் சிரேஸ்ட புதல்வி கிருபேஸ்வரியை 1994ம் ஆண்டு இவரின் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. இவர்கள் இருவரும் இணைந்து இனிதே திருமண பந்தத்தில் வாழ்ந்து வரும் வேளையில் றஜிந்தா, கிசோன், றீனா என்ற மூன்று முத்துக்களைப் பெற்று எடுத்தார்கள். பிள்ளைகளின் மழலைப் பேச்சிலும், ஆடல் பாடல்களையும் கண்டு மிக்க மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தார். மூத்த பெண் பருவமடைந்ததும் பூப்புனித நீராட்டு விழாவை மிகவும் கோலாகலமாக நடத்தி வைத்தார். காலம் யாரைத்தான் விட்டது? அந்தக் காலனுக்கும் பொறுக்கவில்லை போலும். மகிழ்ச்சியாக வாழ்ந்தவரை கட்டின மனைவி கதற, பிள்ளைகள் கலங்க பெற்றவர்கள் பதற, தாய் தந்தை காலடியில் காலனவன் பறித்து விட்டான். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றவர்கள் புலம்பல்

ஆசையாய் தூளி கட்டி
அழகாய் அரவணைத்து
நேசமாய் வளர்த்த பிள்ளை
பெற்றவர்கள் பார்த்திருக்க
பாரை விட்டு போனதென்ன
எத்தனை முறை சொல்லி அழுதாலும்
தீரா நம் சோகங்கள்
எத்திசையில் பார்த்தாலும் - எம் மகனே
தெரிவது உன் முகமடா!
உன் குரல் கேட்ட எம் செவிகள்
வேறெந்த சத்தமும் ஏற்க மறுக்குதடா!
எம்மையெல்லாம் ஆறாத் துயர்க்கடலில்
ஓய்வின்றி தவிக்க விட்டு
ஓய்ந்து விழி மூடி விட்டாய்
பாய்ந்து விடும் வெள்ளமதில்
பரிதவிக்கும் உயிரினம் போல்
மாய்ந்து அழ வைத்து விட்டு
மறு உலகம் சென்று விட்டாய்
புண்பட்டு நெஞ்சமெல்லாம்
புலம்பி நிதம் அழுவதன்றி
மண் மீது நாம் உனக்கு
மாறென்ன செய்வதையா
பெற்றவர்கள் நாமிருக்க
காலனவன் பறித்துவிட்டான் - உன் உயிரை
மறு பிறவி இருந்தால் மீண்டும் பிறப்பாய்
எம் மகனாக!

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் புலம்பல்

கைப்பிடித்த நாள் முதலாய்
கண்ணெனவே காத்து வந்த
என்னவரே என்னுயிரே!
என்னைத் தவிக்க விட்டு
இறையடியை நாடியதேன் - உம்
நினைவுகள் என் மனதை
நித்தம் வந்து வாட்டுதையா
கூவி அழைத்த குரலின்று
கனவிலும் நினைவிலும்
நின்று எதிரொலிக்க
நித்தம் நினைவிழந்து வாடுகின்றேன்
காலமெல்லாம் உம் காலடியில்
நான் கிடந்து பணி புரிய தினம் துடித்தேன்
காலன் தான் உமைக் கவர்ந்து
எனைத் தவிக்க வைத்தானோ
கண்ணை இமை காப்பது போல்
எம்மைக் காத்து வந்தீரே
உம் கண்மணிகள் கதறி அழும் காட்சியை
என்னால் தாங்க முடியவில்லை
கலங்கி நிற்கிறேன் என் அன்புக் கணவரே
துயரமது நெஞ்சமதை வாட்டுதையா
என்னவராய் என்னுயிராய் - வாழ்ந்த
உங்கள் கலையாத நினைவுகள் தனைச் சுமந்து
உங்கள் நினைவுடன் காலமெல்லாம் வாழ்ந்திடுவேன்

அன்பு மனைவி
கிருபேஸ்வரி (கிருபா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

அன்பின் தந்தையே
ஆருயிர் அப்பாவே
ஆற்ற முடியவில்லை - இந்த
முடிவற்ற சோகமது
நேர்ந்து விட்டதே - இது
இயற்கையின் நியதி என்று
தேற்றவும் முடியவில்லை
தேம்பி அழுகிறோம் - அப்பா
நொந்து தவிக்கிறோம்
யாரிடம் சொல்வோம்?
யாரைத்தான் நோவோம்?
அடி நெஞ்சில் வேதனை
அழுதாலும் தீருதில்லை
தவித்து துடிக்கிறோம் - பிள்ளைகள் நாம்
கண்ணை இமை காப்பது போல்
பேணி வளர்த்தீர்கள்
பெற்று விட்ட நன்றிக் கடனை
எப் பிறப்பில் தீர்ப்போம் அப்பா
எங்கள் வாழ்க்கையின் வழிகாட்டி
நீங்கள் அப்பா
இறைவனுடன் சேர்ந்து
தெய்வமாக மாறியதால்
இமைக்கும் பொழுதெல்லாம்
எம்மைக் காத்து வருவீரே
என்றும் உங்கள் நினைவுடன்
வாழ்ந்து கொண்டிருக்கும் பிள்ளைகள்

றஜிந்தா, கிசோன், றீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் புலம்பல்

எங்கள் உடன் பிறப்பே
கண்மூடி உறங்கியது ஏன்?
முல்லையிலும் வெள்ளை என
உள்ளம் உள்ள சகோதரனே
இல்லை இனி நீ இல்லை என ஆனபோது
நாமிங்கே நிர்க்கதி ஆனோம்
தயவிழந்து வாடுகிறோம்
பூமலர்ந்த புன்னகையை யார் முகத்தில் பார்ப்போம்?
நேர்ந்து விட்ட உன் பிரிவை யார் மூலம் தீர்ப்போம்
அரவணைப்பில் தந்தையாக - அன்பில்
அன்னையாக அறிவுறுத்தும் ஆசானாக
பல முகங்களில் உன்னை உணர்ந்திருக்கிறோம்
கண்முடி உறங்கியது ஏன்
கமல முகம் வாடியது ஏன்
எண்ணரிய பண்பனைத்தும்
காத்து வந்த சகோதரனே
விண்ணுலகு எய்வதற்கோ
விரைந்தோடி நீ போனாய்
மண்ணுலகில் எம் துயரை
மறந்ததன் மர்மம் என்ன
வந்தவர் எல்லாம் போவது உண்மை - இது
வாழ்வியல் உலகில் இயற்கை தன்மை - என்ற
சிந்தனை எமக்கு தோன்றிய போதும் - நெஞ்சில்
உந்தனை இழந்த எங்களுக்கு வேதனை
உணர்வே மிஞ்சும்.
உன் நினைவோடு வாழ்ந்து கொண்டிருக்கும்

உன் உடன் பிறப்புகள்
சகோதரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமன் மாமியின் புலம்பல்

பெருந்தகையே எம் மருமகனே
நீங்கள் விடைபெற்ற போதிலும்
உங்கள் நினைவுகள் மட்டும்
மறு பதிப்பாக எம் நெஞ்சில்
பண்பின் பிறப்பிடமே
பாசத்தின் மறு உருவே - எம்
குலத்தின் பெரு மகனே
எமது அருமை மருமகனே!
ஆற்றலின் இருப்பிடமே
எளிமையின் சிறப்புருவே
கருணையின் ஒரு வடிவே
கலங்கும் விழிகளுடன் நாம்
சிரம் தாழ்த்தி பணிகிறோம்
தாழா வேதனையுடன் சுமை தாங்கா
மனதுடன் தடுமாறி தவிக்கிறோம்
கண்கள் பல உங்களை தேட
கண்கள் எல்லாம் கடலாய் பொங்க
கலங்கவிட்டு எங்கு சென்றீர்
எண்ணி எண்ணியே தவிக்கிறோம்
உம் பாதத்திற்கு கண்ணீரை காணிக்கை ஆக்குகிறோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

என்றும் உங்கள் நினைவுடன்
மாமா மாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர்கள், மைத்துனிகள் புலம்பல்

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் பொக்கிஷமாய்
விளங்கிய எங்கள் அத்தானே!
எங்களை எல்லாம் தவிக்க விட்டு
எங்கு சென்றீர்கள்
நெஞ்சினில் வஞ்சமில்லை
உள்ளத்தில் கள்ளமில்லை
உதட்டினில் பொய்யில்லை
எங்கள் அரவணைப்பில் ஒரு குறையுமில்லை
எங்கள் அத்தான் இருக்கிறார் என்ற துணிவுடன்
நாங்கள் வாழ்ந்து வந்தோம்
எங்களை பிரிந்து எங்கு சென்றீர்கள்
எங்கள் அன்பு அத்தான்

உங்கள் நினைவுடன்
மைத்துனர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி ரமேஷ் புலம்பல்

அடிமனதின் ஆழத்தில் மறைந்திருக்கும்
என் வலிகளை வடிக்கிறேன், கவிதை வடிவில்
கண்ணீரில் கரைந்தோடும் வேதனை
உணர்வுகள் அலைமோதிட
உணர்ச்சிகள் ததும்ப - எழுதுகிறேன் அண்ணாவுக்கு
நினைத்துப் பார்க்கையில் வலிக்கிறது
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு மணித்துளியும்
ஒவ்வொரு விடியலும் - கடினமாகவே
இருக்கிறது - அண்ணா உன்னைப் பிரிந்த
வேதனை அண்ணா ரவி அண்ணா
நீ இல்லை என்று சொல்ல மறுக்கிறது என் நெஞ்சம்.
நம்பிக்கை இல்லை அடுத்த பிறவியில் - எனக்கு
ஆனால் நான் விரும்புகிறேன் - மறுபடியும்
நீயே எனக்கு அண்ணாவாக பிறக்க
ஆழமான உணர்வினை உணர்த்தும்
நம் அண்ணன் - தம்பி பாசம்
நினைவே கனவாகிப் போனதால்
என்ன என்று சொல்ல எப்படி வார்த்தை கொண்டு எழுத
சேமித்து வைக்கிறேன் - காலங்கள் உருண்டோடலாம்
அழியாத நினைவுகளாய் - என் மனதில்
இருக்கும் பாசம் - என் மரணம் வரை
உன்னிடம் பேசும்
வாழும் போது மட்டும் வாழ்வது வாழ்வல்ல
சாவின் பின்னரும் வாழ்வதுதான் வாழ்வாகிறது.
அன்றும், இன்றும் என்றும் நீ எங்கள்
நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருப்பாய் ரவி அண்ணா

உன் ஆருயிர் தம்பி
ரமேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ravi Mama

Ravi Mama, a kind person with a wonderful heart of gold.

On our annual visits, he'd never fail to make us happy. He'd serve us a feast and shower us with happiness. His capacious smile was contagious and being around him was a pleasure. His company and the bond of affection he shared was immense. His words of wisdom will remain in our hearts forever.

If tears could build a staircase and memories were a lane. We would walk right up to heaven and bring you back again. The eventful trips we've had have now become past memories and will be cherished forever more.

His loss is a great one and his love will forever remain in our hearts. Ravi Mama, you were a great man and may your soul rest in peace.

With Love,
Your niece and nephew
**Rajee & Simbu**
(London)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அணைந்தும் அணையா விளக்காய்
அன்பு, பண்பு, பாசம் ஆகிய கோணங்களில் சிறந்து
வாழ்ந்து வழி காட்டிய எங்கள் குடும்பத் தலைவர்
**திரு குமாரசாமி ரவீந்திரகுமார்** அவர்களின்
மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும்,
மாலைகள், மலர்வளையங்கள் சமர்ப்பித்து, அஞ்சலி
செலுத்தியோருக்கும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து
தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியும் எமது துக்கத்தில்
பங்கு கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இறுதி
ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் அந்தியேட்டி
சபிண்டிகரண நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும்
அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Designed & Printed @ JR Print, London
Tel: 00 44 208 503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org